அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை: 24/2014 (I)

எனது இல. EST 5/ 1/ 49
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2014.12.31

அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்
மாகாண பிரதம செயலாளர்களுக்கும்
திணைக்களத் தலைவர்களுக்கும்
அரசாங்க கூட்டுத்தாபனங்களினதும், நியதிச்சட்ட சபைகளினதும்,
முழுமையாக அரசாங்கத்துக்குரித்தான கம்பனிகளினது தலைவர்களுக்கும்

## 2015 வரவு செலவுத்திட்ட பிரேரணைக்கமைய அரசதுறையின் அலுவலர்களுக்கும் <u>ஓய்வூதியர்களுக்குமான இடைக்கால கொடுப்பனவுகளை வழங்குதல்</u>

மேற்படி விடயம் சம்பந்தமாக வெளியிடப்பட்ட 2014.11.12 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 24/2014 தொடர்பாக தங்களது அவதானத்துக்கு உட்படுத்துகின்றேன்.

**02.** அச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் 2006.09.22 ஆந் திகதிய முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இல. 30 மற்றும் 2009.06.01 ஆந் திகதிய முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இல. 30 (1) ஆகிய சுற்றறிக்கைகளுக்கு அமைய, சம்பளத் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ள மற்றும் அச் சம்பள திட்டங்களை உள்ளடக்கியதாக சம்பளம் வழங்கப்படுகின்ற முழுமையாக அரசுடமையான கம்பனிகளின் அலுவலர்களுக்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.

**03.** 2015 வரவு செலவுத்திட்டத்தின்படி அரசாங்க அலுவலர் ஒருவரின் அடிப்படைச் சம்பளம் மாதமொன்றுக்கு ரூ. 15000/- மற்றும் வாழ்க்கைச் செலவுப்படி மாதமொன்றுக்கு ரூ.10000/- ஆக புதிய சம்பள சுற்றறிக்கை 2015.01.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தும் வகையில் வெளியிடப்படவுள்ளது. அப் புதிய சம்பள சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளம் மற்றும் படிகள் பதவிநிலையல்லாத அலுவலர்களுக்கு 2015 ஜூலை மாதத்தில் இருந்தும், பதவிநிலை அலுவலர்களுக்கு 2015 செப்தெம்பர் மாதத்திலிருந்தும், மேற்படி காலஎல்லைத்திற்குரிய நிலுவை சம்பளத்துடன் வழங்கப்படும். அது வரை அனைத்து அலுவலர்களுக்கும் தற்போது வழங்கப்படுகின்ற ரூ. 3000/- ஆன இடைக்கால கொடுப்பனவு வழங்கப்படும்.

04. அரச அலுவலர்களான ஓய்வூதியர்களின் ஓய்வூதியமும், மேற்படி புதிய சம்பளச் சுற்றறிக்கைக்கு அமைய, சீராக்கப்பட்டு சகல ஓய்வூதிய முரண்பாடுகளும் சரி செய்யப்பட்டு குறித்த ஓய்வூதிய சுற்றறிக்கை 2015.01.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் வகையில் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்படும். அந்த ஓய்வூதிய சுற்றறிக்கைக்கு அமைய ஓய்வூதியம் வழங்குவதற்கு 2015 ஜூலை மாதத்தில் இருந்து மேற்படி காலஎல்லைக்குரியதாக நிலுவை ஓய்வூதியத்துடன் வழங்கப்படும். எனினும், சகல ஓய்வூதியர்களுக்கும் தற்போது வழங்கப்படுகின்ற ரூ. 2500/- மாதாந்த இடைக்கால கொடுப்பனவு வழங்கப்படும்.

05. இச் சுற்றறிக்கை பொதுத்திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்/ பி.பீ. அபேகோன்
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு